11.01.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.375/2021

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜா | சாதி | |
| த/பெ | ரமேஷ் | மதம் | |
| கிராமம் | சிவபெருமான்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 182023 |
| மாவட்டம் | | தேதி | |

( 11.01.2023 ) இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் சிவபெருமான்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அசா.1 நதியா எனது அத்தை, அசா2. கோபாலகிருஷ்ணன் எனது தாய்மாமன். இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்பன் அ.சா.1ன் கணவர். ஆஜர் எதிரிகள் 4வரையும் எனக்கு தெரியும், அவர்கள் அனைவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். 25.4.2021ந்தேதி திருக்கனுரில் உள்ள எனது உறவினர் வீட்டிற்கு நான் சென்றுவிட்டு காலை சுமார் 11.00மணியளவில் சிவபெருமான்பாளையம் வருவதற்காக திருக்கனூர் ஏரிக்கரை வழியாக டூவீலரில் நான் மட்டும் வந்தேன். அந்த ஏரிக்கரையில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. 1வது எதிரி சரத்குமார், 2வது எதிரி சரவணன் ஆகியோர் எனது மாமா அய்யப்பனை மேற்படி ஆலமரம் அடியில் வைத்து அடித்துக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு டூவீலரில் அவரை ஏற்றிக்கொண்டு எ்ங்களது ஊர் நோக்கி சென்றார்கள் அவர் சென்ற டூவிலர் நெ. PY05H1570 . நான் எனது வண்டியில் வீட்டிற்கு வந்துவிட்டேன்.

சரவணன் மற்றும் சரத்குமார் அவரது உறவினர்கள், குமாரவேல் மற்றும் அவரது மனைவி ஜானகி அய்யப்பனை அடித்து காயப்படுத்தினார்கள். அதன்பிறகு அவர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பட்டு அவர் அங்கு இறந்துவிட்டார். மறுநாள் 26.4.2021 தேதி காலையில் நானும் வழுதாவூர் பக்கிரிபாளையம் கிராமத்தை சேர்ந்த ராஜ்குமார் என்பவரும் எங்கள் ஊர் பிள்ளையார் கோவிலில் நின்றுக்கொண்டிருந்தோம். விக்கிரவாண்டி போலீசார் அங்கு வந்து சம்பவ இடத்தை காலை 6.00மணியளவில் பார்வையிட்டார்கள். நாங்களும் அருகில் சென்று பார்த்தோம். எங்களை சாட்சியாக இருக்குமாறு சொன்னார்கள். நாங்கள் கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது. முதல் சாட்சி கையொப்பம் ராஜ்குமார் என்பவருடையது. போலீசார் பார்வை மகசர் எழுதிய பிறகே என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அந்த பார்வை மகசர் அசாஆ.2. ரத்தம் படிந்த சிமெண்ட் காரை ரத்தம் படியாத சிமெண்ட் காரை முணியம்மாள் வீட்டு எதிரில் சிமெண்ட் ரோட்டில் எடுத்தார்கள். அதன்பிறகு எங்கள் ஊர் கோவில் அருகிலும் ரத்தம் படிந்த மண், மற்றும் ரத்தம் ்படியாத மண் ஆகியவற்றையும் எடுத்தார்க்ள். அதன்பிறகு எங்கள் ஊர் வாட்டர் டேங்க் துணில் ரத்தம் படிந்திருந்தது. அதையும் உடைத்து ரத்தம் படிந்த மற்றும் ரத்தம் படியாத வாட்டர் டேங்க் துண் பகுதியை உடைத்து எடுத்து கைப்பற்றினார்கள். போலீசார் அவ்வாறு கைப்பற்றியதற்கு தனித்தனியாக கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள். அதில் ்நானும் ராஜ்குமாரும் சாட்சி கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் 3 கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 2வது கையொப்பங்கள் என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகசர்கள் முறையே அசா.ஆ.3 முதல் 5 வரை. என்னிடம் காட்டப்படும் சான்றுப் பொருட்கள் தான் அன்று கைப்பற்றப்பட்டவை. ரத்தம் படிந்த சிமெண்ட் காரை ரத்தம் படியாத சிமெண்ட் காரை முறையே அசா.பொ.4,5 ஆகும். ரத்தம் படிந்த மண்,

மற்றும் ரத்தம் ' படியாத மண் முறையே அசா.பொ.6,7 ஆகும். ரத்தம் படிந்த மற்றும் ரத்தம் படியாத வாட்டர் டேங்க் துண் பகுதிகள் முறையே அசா.பொ.8, 9 ஆகும். பின்னர் சம்பவம் குறித்து போலீசார் எங்களை விசாரித்தார்கள் நான் நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரிகள் ' தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் மெடிக்கல் டிப்ளோமோ படித்துள்ளேன். நான் சிவபெருமான்பாளையத்தில் நான் வசிப்பதற்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை வைத்துள்ளேன். எனது பெற்றோரும் சிவபெருமான்பாளையத்தில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். நான் பிறந்த ஊர் பண்ரூட்டி கரும்பூர் என்றால் சரியல்ல. எனது அப்பாவின் ஊர் அது. ஆனால் நான் பிறந்தது சிவபெருமான்பாளையம் தான். எனது பிறப்பு சான்றிதழ் சிவபெருமான்பாளையம் முகவரிக்குள் உள்ளது. எனது மாமா கண்ணியப்பன் காவலராக பணியாற்றுகிறார் என்றால் சரிதான். 26.4.2021 ந்தேதி என்னை விக்கிரவாண்டி காவல்நிலையத்தில் இருந்து விசாரித்த அதிகாரியின் பதிவி எனக்கு தெரியாது. காலை 6.00மணியளவில் எங்கள் ஊர் பிள்ளையார் கோவில் அருகில் வைத்து என்னை விசாரித்தார்கள். காலை 9.00மணி வரை விசாரணை நடந்தது. நான் சொன்ன விபரங்களை எழுதினார்களா என்றால் ஆமாம். நீதிமன்றம் வருவதற்கு முன்பு அந்த வாக்குமூலத்தை படித்துப்பார்த்தேனா என்றால் காட்டினார்கள். நான் திருக்கனுரில் டிப்ளோமோ படித்த கல்லுரி பெயர் அப்போலோ இன்ஸ்கூடிட் ஆப் பாராமெடிக்கல். 2020 முதல் 2022 வரை 2 வருட படிப்பு நான் படித்தேன். காலை 9.30மணி முதல் மாலை 4.00மணி வரை பள்ளி நேரம். நான் வழக்கமாக தனியார் பேருந்தில் எனது கல்லுரிக்கு செல்வேன். 2020 முதல் 2022 வரை நான் பேருந்தில் தான் கல்லுரிக்கு சென்றுவந்தேன் என்றால் சரிதான். அந்த பேருந்தில் மண்ணாடிப்பட்டில் ஏறி திருக்கனுரில் இறங்குவேன். அது ஏரிக்கரை வழியல்ல. 25.4.2021நதேதி நான் திருக்கனுரில் இருந்த எனது தங்கையை பார்த்து வந்தேன். எனது ரூவீலர் நெம்பர் நினைவில்லை. எனது பெரியப்பா வீட்டில் இருந்த தங்கையை பார்துவந்தேன். திருக்கனுரில் எனது பெரியப்பா வீட்டில் இருந்த தங்கையை இருசக்கர வாகனத்தில் சென்று பார்த்து வந்தேன் என்று போலீஸ் விசாரணையிலும் சொன்னேன். திருக்கனுர் சாலையில் இருந்து வந்து ஏரிக்கரை வழி துவங்கம் இடம் எது என்று எனக்கு தெரியவில்லை. நான் தினந்தோறும் அவ்வழியில் செல்வதில்லை. 25.4.2021ந்தேதி தான் அந்த வழியை நான் பயன்படுத்தினேன். புத்துக்கோவில் அருகில் பெரிய ஆலமரம் உள்ளது. அந்த புத்துக்கோவிலை என்னவென்று அழைப்பார்கள் என்றால் அந்த கோவிலுக்கு அதற்கு முன்பு சென்றதில்லை. சாமி பெயர்

தெரியாது. ஏரிக்கரை வழியில் தான் ஆலமரம் உள்ளது. அந்த ஆலமரத்திற்கு அருகில் 100மீ தொலையில் கரும்பு தோட்டம் உள்ளது. ஏரிக்கரையின் வழி திசை எனக்கு தெரியாது. திருக்கனூரில் இருந்து ஊருக்கு வரும்போது வலதுபுறத்தில் கரும்பு தோட்டம் இருந்தது. திசை எனக்கு தெரியாது. எனது மாமாவை அய்யப்பனை 1,2 எதிரிகள் அடித்ததை நான் 50மீ தொலைவில் பார்த்தேன். கையால் தான் அடித்தார்கள். அப்போது நேரம் காலை 11.00மணி இருக்கும். அப்போது நான் செல்போன் வைத்திருந்தேனா என்றால் வீட்டில் வைத்திருந்தேன். எனது மாமாவை தாக்கியபோது நான் மறிக்க முயற்சி செய்தேனா என்றால் இல்லை. நான் ஆலமரம் அருகில் வண்டியை நிறுத்திவும் எதிரிகள் எனது மாமாவை வண்டியில ' வைத்து அழைத்துச்சென்றார்கள். அவர்கள் முன்னே செல்ல நான் பின்னாடி எனது வண்டியில் வந்தேன். எதிரிகளிடம் எனது மாமாவை ஏன் அடித்தீர்கள் என்று கேட்டேனா என்றால் நான் கூப்பிட்டதை எதிரிகள் காதில் வாங்காமல் வேகமாக சென்றுவிட்டார்கள். எனது ஸ்கூட்டி வண்டியில் வேகமாக செல்லமுடியவில்லை. எனது மாமாவை எதிரிகள் தாக்கி வண்டியில் கொண்டுசெல்லும்போது அவரை காப்பாற்ற முயற்சி செய்தேனா என்றால் என்னிடம் செல்போன் இல்லை. எதிரிகளின் வாகனத்தை முந்தி சென்று எனது உறவினர்களிடம் தாகவல் சொல்ல முயற்சி செய்தேனா என்றால் எனது வண்டியில் வேகமாக செல்லமுடியவில்லை. அந்த இடத்தில் என்னை தவிர வேறு யாரும் அவர்களை பார்க்கவில்லை. நான் காலை 11.10 மணிக்கெல்லாம் வீட்டிற்கு வந்துவிட்டேன். மேற்படி விவரத்தை நான் எனது தாயார் மற்றும் எனது சகோதரியிடம் சொன்னேன். வேறு யாரிடமும் சொல்லவில்லை. நான் வேலை இருந்ததால் பாண்டிச்சேரிக்கு கிளம்பி சென்றுவிட்டேன். இரவு 10 மணிக்கு வீடு திரும்பினேன். மறுநாள் அதிகாலை 4 மணியளவில்தான் எனது அம்மா எனக்கு தகவல் சொன்னார்கள். ஊரில் வைத்து எதிரிகள் எனது மாமா ஐயப்பனை அடித்தார்கள் என்று சொன்னார்கள். அதற்குபின் நான் எனது மாமாவை பார்க்கவில்லை. சம்பவத்தன்று நான் பாண்டிச்சேரிக்கு கிளம்பும்போது பகல் 12.40 மணியிருக்கும். அப்போது எல்லாம் ஊருக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. எங்க தெருவில் பிரச்சனை இல்லை என்றால் நான் வீட்டில் இருந்ததால் தெரியவில்லை. சத்தம் எதுவும் கேட்கவில்லை. வழுதாவூர், பக்கிரிபாளையத்தை சேர்ந்த ராஜ்குமார் எனது அம்மாவழியில் உறவினர். நான் பிள்ளையார் கோவில் அருகில் காலை 6.00 மணிக்கு ராஜ்குமாரை பார்த்தேன். போலீசாரை நான் எதுவும் விசாரிக்கவில்லை. அன்றைய தினம் நான் எத்தனை கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்றால் 3 கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். 3 வது கையொப்பம் சிமெண்ட் காரைகள் கைப்பற்றபோது எழுதப்பட்ட மகசரில் போட்டேன். அப்போது நேரம் காலை 8.40 மணியிருக்கலாம்.

பிள்ளையார் கோவில் அருகில் வாட்டார் டேங்கில் தூணில் இருந்தும் சிமெண்ட் காரை உடைத்து எடுத்தார்கள். அது மேல்நிலை நீர்தேக்க தொட்டி. 4 தூண்கள் அந்த தொட்டிக்கு இருந்தது. எந்த திசையில் இருந்த தூணில் இருந்து உடைத்து எடுத்தார்கள் என்று எனக்கு தற்சமயம் நினைவில்லை. எத்தனை காரை எடுத்தார்கள் என்றால் துண்டு துண்டுகாள வந்துவிட்டது. எத்தனை என்று நினைவில்லை. இரத்தக்கறை தோய்ந்த துண்டுகள் எத்தனை மற்றும் இரத்தக்கறை படியாத துண்டுகள் எத்தனை என்றால் அது எனக்கு நினைவில்லை. 2 வது கையொப்பம் 8- 8.20 க்குள் போட்டேன். இரத்தக்கறை படிந்த மண் கைப்பற்றியதற்காக போட்டேன். முனியம்மா வீட்டு எதிரில் ரோட்டில் இருந்த சிமெண்ட் காரைகளை உடைத்து எடுத்ததற்கு முதலாவது கையொப்பம் போட்டேன். அவைகள்தான் எடுத்தார்கள். வேறு எதுவும் எடுத்தார்களா என்றால் இல்லை. சிமெண்ட் காரை துண்டுகள் எத்தனை என்று என்னால் சொல்லமுடியாது. உடைத்து எடுக்கும்போது சிறுசிறு துண்டுகளாகி விட்டது. அப்போது சுமார் காலை 7.40 மணியிருக்கும். பார்வை மகசரை படித்து பார்த்துதான் கையொப்பம் போட்டேன். பார்வை மகசரில் குறிப்பிடப்பட்ட இரத்தக்கறை படிந்த சிறிய கட்டில் காலை கோவில் பக்கத்தில் உள்ள மல்லிகா பாட்டி வீட்டிற்கு பக்கத்து வீட்டிற்குபின்னால் இருந்து எடுத்தார்கள். போலீசார்தான் அதை எடுத்தார்கள். நேரம் தெரியவில்லை. எனது முன்னிலையில் படம் வரைந்தார்களா என்றால் தாளில் வரைந்தார்கள். அந்த நேரம் என்ன என்றால் நேரம் தெரியவில்லை. காவலர்களில் யார் அதை தயார் செய்தார் என்றும் எனக்கு நினைவில்லை. சிமெண்ட் காரைகள் கைப்பற்றும்போது வரைபடத்தில் காண்பித்தார்களா என்றால் காண்பித்தார்கள். முனியம்மா வீட்டு அருகில் சிமெண்ட் காரை மட்டும்தான் கைப்பற்றினார்கள். 26.04.2021 க்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவம் எதையும் நேரில் பார்க்கவில்லை என்றும், நான் படித்த பையன் என்பதை பயன்படுத்தி காவலர் கன்னியப்பன் என்னை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துவிட்டார் என்றும் நான் சொல்வது எதுவும் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் ஆவணங்களை படித்து பார்த்துவிட்டு அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பண்ருட்டி, கரும்பூரை சேர்ந்தவர் என்றும், சிவபெருமான் பாளையத்தில் வசிப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஐயப்பன் 2 வது எதிரியின் மனைவியை தாக்கியதாக ஒரு வழக்கு உள்ளது என்றால் நான் கேள்விப்பட்டேன். அந்த வழக்கில் காவல் துறையினர் கைது செய்து விடுவார் என்று ஐயப்பன் ஊரில் இல்லை என்றால் சரிதான். எங்கேயோ ஐயப்பன் காயம் அடைந்துள்ளார் என்றும், அதனை பயன்படுத்தி கன்னியப்பனால் ஜோடிக்கப்பட்டு நதியாவால் எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக போலீசார் சொல்லிக்கொடுத்து நான் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எனது முன்னிலையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.